செ.வெ.எண்: நாள்: 28.06.2022

**விருதுநகர் மாவட்டம்**
**கொரோனா வைரஸ் தற்போது பரவலாக அதிகரித்து வருவதை தடுக்கும் பொருட்டு, அனைவரும் உரிய பாதுகாப்பு விதிமுறைகளை பின்பற்றுவதை உறுதி செய்ய வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஜெ.மேகநாதரெட்டி,இ.ஆ.ப., அவர்கள் தகவல்**

---

கொரோனா வைரஸ் தற்போது பரவலாக அதிகரித்து வருவதை தடுக்கும் பொருட்டு, மாவட்டத்திலுள்ள அனைத்து மக்களும் தவறாமல் முகக்கவசம் அணிந்து கொள்ளவும், பொது இடங்களில் முகக்கவசம் அணியாதவர்களுக்கு ரூ.500/- அபராதம் விதிக்கப்படும் எனவும், இதுவரை தடுப்பூசி (முதல் / இரண்டாவது தவணை/ பூஸ்டூா தடுப்பூசி) செலுத்திக் கொள்ளாதவர்கள், தடுப்பூசி செலுத்திக்கொள்ளவும், திரையரங்குகள், ஹோட்டல்கள், உணவகங்கள் மற்றும் கடைகள் போன்ற அனைத்து இடங்களிலும் ,முகக்கவசம் கட்டாயம் அணிய வேண்டுமென்றும், சமூக இடைவெளியை கடைப்பிடிக்க வேண்டுமென்றும், உரியமுறையில் அடிக்கடி கைகளை கழுவி கொள்ள வேண்டும் எனவும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மேலும், பொதுமக்கள் அனைவரும் திருமணம், இறப்பு, கோவில் திருவிழாக்கள், விருந்துகள், சந்தைகள் போன்ற பொது இடங்களில் அதிகளவில் கூடுவதை தவிர்த்திடும் படியும், அவ்வாறு செல்ல நேரிட்டால் உரிய பாதுகாப்பு முறைகளை பின்பற்றி தங்களை தற்காத்து கொள்ளும் படியும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இதை தவிர, வணிக நிறுவனங்கள், தொழிற்சாலைகள், அலுவலகங்கள் உள்ளிட்ட அனைத்து நிறுவனங்களும் தங்களது நிறுவனத்திற்கு வருகை தரும் அனைத்து வாடிக்கையாளர்களும் பணியாளர்களும் உரிய பாதுகாப்பு விதிமுறைகளை பின்பற்றுவதை உறுதி செய்ய வேண்டும் எனவும் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

மேற்படி கொரோனா விதிமுறைகளை பின்பற்றாதவர்கள் மீது அபராதம் விதிப்பதற்கு, வருவாய்த்துறை மற்றும் காவல் துறைகளை இணைத்து, மாவட்டம் முழுவதும் வட்டாட்சியர்கள் தலைமையில் 22 குழுக்கள் அமைத்து உத்தரவிடப்பட்டுள்ளது.

இவ்வாறாக பொதுமக்கள், வணிகர்கள் அனைவரும் கொரோனா வழிகாட்டு நெறிமுறைகளை முறையாக கடைபிடித்து, கொரோனா வைரஸ் பரவாமல் தடுப்பதற்கு மாவட்ட நிர்வாகத்திற்கு போதிய ஒத்துழைப்பு அளிக்குமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஜெ.மேகநாதரெட்டி,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், விருதுநகர்.**